புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM
• திருவள்ளுவர் ஆண்டு 2056 • சனவரி (JANUARY) 08 2026 • புரட்சி 26 • முழக்கம் (ISSUE) 2 • விலை (PRICE) ரூ.6.00



## இடைவிடாத பரப்புரைகளால் நிறைந்த ‘2025’

# கழகத்தின் ஓராண்டு களப்பணிகள்!

**சனவரி 12:** சென்னை ராயப்பேட்டையில் 25-ஆம் ஆண்டாக தைப்பொங்கல் மற்றும் தமிழ்ப்புத்தாண்டு விழா கோலாகலமாக நடைபெற்றது. திருப்பூர் மாஸ்கோ நகர் பெரியார் திடலில் முழு நாள் நிகழ்வாக தமிழ்ப்புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா எழுச்சியோடு நடைபெற்றது.

**சனவரி 15:** கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் பெரியார் விருது வழங்கப்பட்டது. தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெரியார் விருதுடன், ரூ.5 லட்சத்திற்கான காசோலை, ஒரு சவரன் மதிப்பிலான பதக்கம் வழங்கி கவுரவித்தார். பெரியார் விருது பெற்ற கழகப் பொதுச்செயலாளருக்கு ராயப்பேட்டையில் கழகத் தோழர்கள், தோழமை இயக்கத்தினர் பூங்கொத்து வழங்கி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

**சனவரி 22:** பெரியார் குறித்து கண்மூடித்தனமாக அவதூறுகளை பரப்பி வந்த சீமான் வீட்டை பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி எச்சரித்தது. இதில் திராவிடர் விடுதலைக் கழகம் பெருந்திரளாகப் பங்கேற்று சீமானுக்கு எதிர்ப்பு தெரிவித்தது.

**சனவரி 26:** பெரியார் விருது பெற்ற கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரனுக்கு சென்னை ராயப்பேட்டையில் பாராட்டு விழா நடத்தப்பட்டது. பேராசிரியர் ஜெயரஞ்சன், மூத்த வழக்குரைஞர் துரைசாமி, வாலாசா வல்லவன், எழிலன் எம்.எல்.ஏ, மரு. அமலோற்பவநாதன், மனநல மருத்துவர் சிவபாலன், மூத்த பத்திரிகையாளர் மு.குணசேகரன், பேராசிரியர் கல்யாணி உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்டோர் பொதுச்செயலாளர் உடனான தங்கள் அனுபவங்களை பகிர்ந்துகொண்டனர்.

**சனவரி 30:** கோவை சிவானந்தா குடியிருப்புப் பகுதியில் கழகத்தின் சார்பில் ‘தமிழீழமும் திராவிடர் இயக்கமும்’ என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

**பிப்ரவரி 1:** பல்கலைக்கழக மானியக்குழு விதிகளில் ஒன்றிய அரசு திருத்தம் செய்து, பல்கலைக்கழகங்களை ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிற்கு கொண்டு செல்ல முயற்சித்ததைக் கண்டித்து கழகத்தின் சார்பில் சேலம், சென்னை, ஈரோடு, திருப்பூர், பொள்ளாச்சி, தேனி, மயிலாடுதுறை, வேலூர், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, நாமக்கல், மதுரை, திருச்சி காஞ்சிபுரம் என தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் கழகம் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது.

**பிப்ரவரி 02:** பேரறிஞர் அண்ணாவின் 56-வது நினைவுநாளையொட்டி 26-வது நிமிர்வோம் வாசகர் வட்ட கூட்டம் ராயப்பேட்டை விஜய் மகாலில் நடைபெற்றது. ஊடகவியலாளர்கள் கரிகாலன், மில்ட்டன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**பிப்ரவரி 22:** தூத்துக்குடியில் ‘திராவிடப் பெரியார் யாருக்கு எதிரி?’ என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் சிறப்புரையாற்றினார்.

**பிப்ரவரி 22:** கோபியில் கழக வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன் தலைமையில் ‘பெரியார் என்னும் பெருநெருப்பு’ கருத்தரங்கம் நடைபெற்றது. ஊடகவியலாளர்கள் கரிகாலன், இந்திரகுமார் தேரடி, மில்டன், யூ2புரூடஸ் மைனர், அதர்மம் மனோஜ் ஆகியோர் கருத்துரை வழங்கினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

**பிப்ரவரி 23:** புதுக்கோட்டையில் ‘ஏன் வேண்டும் பெரியார்’ என்னும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. ஊடகவியலாளர் கரிகாலன், அதர்மம் மனோஜ் ஆகியோர் கருத்துரை வழங்கினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

**பிப்ரவரி 26:** இந்தித் திணிப்பு, வெள்ள நிவாரண நிதி மறுப்பு என தமிழர் விரோதப் போக்குடன் செயல்படும் பா.ஜ.க. அரசை கண்டிக்கும் விதமாக, கோவை ஈஷா மையத்திற்கு வருகை தந்த உள்துறை அமைச்சர் அமித் ஷாவிற்கு கருப்புக்கொடி காட்டும் போராட்டம் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

**மார்ச் 15** முதல் சென்னை, விழுப்புரம், சேலம், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் இருந்து ‘பெரியார் இன்னும் ஏன் எதிரிகளை பதற வைக்கிறார்?’ என்ற தலைப்பில் பரப்புரைப் பயணம் தொடங்கி, மார்ச் 22 அன்று மயிலாடுதுறையில் மாநாட்டுடன் முடிவுற்றது. தமிழ்நாடெங்கும் 500 இடங்களில் பரப்புரைக் கூட்டங்கள் மக்கள் பேராதரவோடு நடைபெற்றன.

**ஏப்ரல் 8 – 14:** ‘சூத்திர, பஞ்சமர்களிடமிருந்து பிராமணர்கள் விலகி தங்களது மேலாண்மையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்று இன ஒதுக்கல் கருத்தைப் பேசிய சங்கராச்சாரி மீது நடவடிக்கை எடு’ என்ற மயிலாடுதுறை மாநாட்டுத் தீர்மான விளக்க பரப்புரைக் கூட்டங்கள் சென்னை, திருப்பூர், சேலம், ஈரோடு மாவட்டங்களில் நடைபெற்றன.

**ஏப்ரல் 20:** சேலம் மாவட்டம் மேச்சேரியில் இன ஒதுக்கல் கருத்தைப் பேசிய சங்கராச்சாரி மீது நடவடிக்கை எடு’ என்ற மயிலாடுதுறை மாநாட்டுத் தீர்மான விளக்க பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி கருத்துரையாற்றினார்.

**ஏப்ரல் 21:** மயிலாடுதுறை மாநாட்டு தீர்மானத்தின்படி, இன ஒதுக்கல் கருத்தைப் பேசிய சங்கராச்சாரியை கண்டித்து தமிழ்நாடெங்கும் கழகத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. காஞ்சிபுரத்தில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் பங்கேற்றார். கோவை, நாமக்கல், ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, திருப்பூர், சேலம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**ஏப்ரல் 25, 26:** நியமனப் பொறுப்பில் வரும் ஆளுநர்களை விட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் என துணைவேந்தர்கள் நியமன வழக்கில் உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்திய பின்னரும் உதகையில் துணைவேந்தர்கள் மாநாட்டை ஆளுநர் ஆர்.என்.ரவி கூட்டியதை அடுத்து, ஆர். என்.ரவியை கண்டித்து சேலம், மதுரை, சென்னை, கோவையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**ஏப்ரல் 26:** இன ஒதுக்கல் கருத்தைப் பேசிய சங்கராச்சாரியைக் கண்டித்து மயிலாடுதுறையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**ஏப்ரல் 28:** கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரத்தில், ‘இன ஒதுக்கல் கருத்தைப் பேசிய சங்கராச்சாரி மீது நடவடிக்கை எடு’ என்ற மயிலாடுதுறை மாநாட்டுத் தீர்மான விளக்க பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி, தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார் சிறப்புரையாற்றினார். ‘இன ஒதுக்கல் கருத்தைப் பேசிய சங்கராச்சாரி மீது நடவடிக்கை எடு’ என்ற மயிலாடுதுறை மாநாட்டுத் தீர்மான விளக்கம் மற்றும் புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் தூத்துக்குடியில் நடைபெற்றது. கழக பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் சிறப்புரையாற்றினார்.

**ஏப்ரல் 30:** தோழர் பத்ரி நாராயணன் நினைவுநாளையொட்டி ‘கற்போம் களம் காண்போம்’ என்ற தலைப்பில் சென்னை மாவட்ட இளைஞர் அணி சார்பில் முழு நாள் பயிலரங்கம் நடைபெற்றது. கழகத் தோழர்கள் பிரகாசு, ஜெயப்பிரகாசு, மகிழவன், திமுக சூர்யா கிருஷ்ணமூர்த்தி, ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி ஆகியோர் வகுப்புகள் எடுத்தனர்.

**மே 03:** தென்காசி மாவட்டம் கீழப்பாவூரில் ‘திராவிடப் பெரியார் யாருக்கு எதிரி?’ என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் சிறப்புரையாற்றினார்.

**மே 03:** ‘ஏன் வேண்டும் திராவிட மாடல் ஆட்சி’ என்ற தலைப்பில் கோவை சின்னியம்பாளையத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியை அடுத்த வடகாட்டில் தாழ்த்தப்பட்ட மக்கள் பொங்கல் விழா நடத்தியதற்காக ஆதிக்க ஜாதியினர் கொடூரமான தாக்குதல் நடத்தினர். திவிக தோழர்கள் வடகாட்டில் நேரடி கள ஆய்வில் ஈடுபட்டு, நீதி கிடைக்க துணைநிற்போம் என உறுதி அளித்தனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களுக்கு சீர் வாசகர் வட்டம் சார்பாக 2025-ஆம் ஆண்டுக்கான சமூகப் போராளி விருது அறிவிக்கப்பட்டது.

**மே 9:** திருவாரூர் தங்கராசு நூற்றாண்டையொட்டி நிமிர்வோம் வாசகர் வட்டத்தின் 27-வது கூட்டம் கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரையாற்றினார்.

**மே 16:** மதக்கலவரத்தைத் தூண்டும் விதமாக பேசிய மதுரை ஆதீனத்தை கைது செய்ய வலியுறுத்தி மதுரை மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி தலைமையில் கழகம் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. கழக பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் மற்றும் தோழமை இயக்கத்தினர் பலர் கண்டன உரையாற்றினர்.

**மே 17:** தமிழ்நாடு அறிவியல் மன்றம் மற்றும் திராவிடர் விடுதலைக் கழகம் இணைந்து சென்னை ராயப்பேட்டையில் குழந்தைகளுக்கான ஒரு நாள் பழகு முகாம் நடத்தியது. ஆசிரியர் சிவகாமி, முத்துராணி, விரட்டு கலைக்குழு ஆனந்த் பயிற்சி வழங்கினர். சிற்பி ராஜனின் மந்திரமா? தந்திரமா? அறிவியல் விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

**மே 18:** முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நாளில் நாகர்கோவிலில் திரை நட்சத்திர இசை விழா நிகழ்ச்சி திட்டமிடப்பட்டிருந்த நிலையில், கழகத் தலைவர் வேண்டுகோளை அடுத்து, தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

**மே 24:** சேலம் மாவட்டம் கொளத்தூரில் பெண்கள் தலைமையேற்று நடத்திய நாத்திகர் விழா நடைபெற்றது. இவ்விழாவின் மூடநம்பிக்கை எதிர்ப்பு ஊர்வலக் காட்சிகள் மற்றும் மாநாட்டு உரைகள் சமூக வலைதளங்களில் பெரும் அதிர்வலைகளை கிளப்பி விவாதத்தை ஏற்படுத்தியது.

**சூன் 01:** ‘இடஒதுக்கீடு - அ முதல் ஃ வரை’ என்ற தலைப்பில் கழகத் தலைமை அலுவலகத்தில் தமிழ்நாடு மாணவர் கழகத்தின் சார்பில் புதிய தோழர்களுக்கான அறிமுக வகுப்பு நடைபெற்றது.

**சூன் 01:** மடத்துக்குளம் மோகன் 4-ஆம் ஆண்டு நினைவுநாளையொட்டி மடத்துக்குளம் நான்கு சாலை சந்திப்பில் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி தலைமையில் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. குமரலிங்கம், கொழுமம், காரத்தொழுவு, கணியூர் ஆகிய இடங்களில் இன ஒதுக்கல் பேசும் சங்கராச்சாரியை கண்டித்து பரப்புரைக் கூட்டங்கள் நடைபெற்றன. 20 ஆண்டுகளாக சரித்திர குற்றவாளி பட்டியலில் வைக்கப்பட்டிருந்த கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன் சட்டப் போராட்டத்தின் மூலம் விடுவிக்கப்பட்டார்.

**சூன் 10:** ஆனைமலை முக்கோணம் பகுதியில் குடிஅரசு மற்றும் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஆசிரியர் சிவகாமி, இரா. உமாபதி, காசு.நாகராசன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர்.

**சூன் 12:** மேட்டூர் சென்றிருந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி மரியாதை நிமித்தமாக சந்தித்தார். தாய்த்தமிழர் இயக்கத்தின் சார்பில் சென்னை செங்குன்றத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்துகொண்டு ‘அறிவரண் தளபதி பொட்டு அம்மான்’ நூலை வெளியிட்டார். இனமுரசு சத்யராஜ் நூலைப் பெற்றுக்கொண்டார்.

**சூன் 21:** பாலஸ்தீன ஆதரவுக்குழு சார்பில் எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் முதல் ரவுண்டானா வரை பேரணி நடைபெற்றது. தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் தலைமையில் கழகத் தோழர்கள் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.

கோவை சிவானந்தா குடியிருப்புப் பகுதியில் கழகத்தின் சார்பில் கலைஞர் பிறந்தநாள் விழா கூட்டம் நடைபெற்றது.

**சூன் 25:** வி.பி.சிங் பிறந்தநாளையொட்டி சென்னை பிரசிடென்சி கல்லூரியில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு தபசி குமரன் தலைமையில் கழகத்தின் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது.

**சூலை 04:** புரட்சிப்பெரியார் முழக்கம் நிதிநிலை மற்றும் வளர்ச்சி குறித்து இணைய வழியில் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

**சூலை 05:** நங்கநல்லூரில் குடிஅரசு மற்றும் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு பொதுக்கூட்டம் நடைபெற்றது. கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி ஆகியோர் உரையாற்றினர்.

**சூலை 05:** ‘இந்தியாவே திரும்பிப் பார்க்கும் திராவிட மாடல்’ என்ற தலைப்பில் சேலம் பொன்னம்மாபேட்டையில் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது.

**சூலை 07:** கீழடி ஆய்வறிக்கையை வெளியிடக்கோரி, ஒன்றிய அரசைக் கண்டித்து மதுரை திருவள்ளுவர் சிலை அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. விநாயகர் ஊர்வலம் என்ற பெயரால் மதக் கலவரத்தைத் தூண்டும் சங் பரிவார் அமைப்புகளைக் கட்டுப்படுத்தக் கோரி சென்னை மற்றும் ஈரோடு தெற்கில் காவல்துறையிடம் கழகத்தின் சார்பில் மனு அளிக்கப்பட்டது. நிமிர்வோம் வாசகர் வட்டத்தின் 28-வது கூட்டம் கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரையாற்றினார். எட்வின் பிரபாகரன், பிரகாசு ஆகியோர் நூல் திறனாய்வு செய்தனர்.

**சூலை 12:** ‘இந்தியாவே திரும்பிப் பார்க்கும் திராவிட மாடல்’ என்ற தலைப்பில் சேலம் அம்மாபேட்டையில் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது.

**சூலை 26:** தாய்த்தமிழர் இயக்கம் ஏற்பாட்டில் உருவான காட்டுநாயக்கா தாக்குதல் வெற்றி நூலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி சென்னை வடபழனியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வெளியிட்டார். தோழர் தியாகு பெற்றுக்கொண்டார்.

நிமிர்வோம் வாசகர் வட்டத்தின் 29-வது கூட்டம் தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் தலைமையில் வேலு பிரபாகரன் நினைவேந்தல் கூட்டமாக நடைபெற்றது. இயக்குநர் சங்ககிரி ராஜ்குமார், பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் வேலு பிரபாகரனின் கொள்கைசார் பணிகளை பகிர்ந்துகொண்டனர். நெல்லையில் பொறியியல் பட்டதாரி கவின் ஆணவப் படுகொலையை கண்டித்து கழகத் தலைவர் அறிக்கை, கவின் ஆணவப் படுகொலையை கண்டித்து கோவை உக்கடத்தில் மடியட்டும் ஆணவப் படுகொலைகள்; மனிதம் நம் அடையாளம் - ஜாதி நமக்கு அவமானம்’ என்ற தலைப்பில் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது.

**சூலை 27:** சாலிகிராமத்தில் நடைபெற்ற வேலு பிரபாகரன் நினைவேந்தல் நிகழ்ச்சியில் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், இனமுரசு சத்யராஜ், கோவை ராமகிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றினர்.

# ஜாதிக் கொடுமைகளுக்கு எதிராக ஓயாது பரப்புரை!

**ஆகஸ்ட் 01:** விநாயகர் ஊர்வலம் என்ற பெயரால் மதக் கலவரத்தை தூண்டும் சங் பரிவார் அமைப்புகளைக் கட்டுப்படுத்தக் கோரி கோவையில் காவல்துறையிடம் கழகத்தின் சார்பில் மனு அளிக்கப்பட்டது.

**ஆகஸ்ட் 03:** சேலம் மாவட்டம் மேச்சேரியில் இளைஞர் அணி சார்பில் பெரியார் என்னும் பெரு நெருப்பு கருத்தரங்கம் நடைபெற்றது. மில்டன், யூ2புரூடஸ் மைனர், இந்திரகுமார் தேரடி கருத்துரை வழங்கினர். கழகத் தலைவர் நிறைவுரையாற்றினார்.

**ஆகஸ்ட் 06:** ஆணவப் படுகொலைகளைத் தடுக்க தனிச்சட்டம் இயற்றக்கோரியும், கவின் படுகொலைக்கு காரணமான அனைவருக்கும் கடுமையான தண்டனை பெற்றுத்தரக்கோரியும் பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலில் கழகத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**ஆகஸ்ட் 08:** குடியாத்தத்தில் குடிஅரசு மற்றும் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு பொதுக்கூட்டம் எழுச்சியோடு நடைபெற்றது. ஜாதி மறுப்பு மற்றும் விதவை மறுமணம் செய்துகொண்ட இணையர்கள் இந்நிகழ்ச்சியில் பாராட்டப்பட்டனர். கழகத்தலைவர் சிறப்புரையாற்றினார்.

**ஆகஸ்ட் 09:** சமூக நீதி எழுத்தாளர் சு.விஜயபாஸ்கர் படத்திறப்பு நிகழ்ச்சி தேவநேயப் பாவாணார் அரங்கத்தில் நடைபெற்றது. துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் படத்தைத் திறந்துவைத்து நினைவேந்தல் உரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி 5 ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டு நினைவேந்தல் உரையாற்றினார்.

**ஆகஸ்ட் 11:** சென்னை ரிப்பன் மாளிகை முன்பு நடைபெற்ற தூய்மைப் பணியாளர்கள் போராட்டத்திற்கு தபசி குமரன் தலைமையில் கழகத் தோழர்கள் சென்று ஆதரவு தெரிவித்தனர்.

**ஆகஸ்ட் 12–14:** சென்னையில் ‘மனிதம் நமது அடையாளம்! ஜாதி நமக்கு அவமானம்! மடியட்டும் ஆணவப் படுகொலைகள்!’ என்ற தலைப்பில் 3 நாட்கள் தொடர் பிரச்சாரம் நடைபெற்றது.

**ஆகஸ்ட் 12–14:** திருப்பூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் ‘மனிதம் நமது அடையாளம்! ஜாதி நமக்கு அவமானம்! மடியட்டும் ஆணவப் படுகொலைகள்!’ என்ற தலைப்பில் 2 நாட்கள் தொடர் பிரச்சாரம் நடைபெற்றது.

**ஆகஸ்ட் 16:** ஆணவப் படுகொலைகளை தடுக்க தனிச்சட்டம் இயற்றக்கோரி கடலூர் மாவட்டம் மஞ்சக்குப்பத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**ஆகஸ்ட் 17:** சேலம் மாவட்டம் கொளத்தூரில் உள்ள கே.வி.ஆர். திருமண மண்டபத்தில் ‘பெரியார் என்னும் பெருநெருப்பு’ கருத்தரங்கம் மாநாடு போல நடைபெற்றது. வழக்குரைஞர் திருமூர்த்தி, மில்ட்டன், மைனர், இந்திரகுமார் தேரடி, கரிகாலன், ‘லவுட் ஸ்பீக்கர்’ ஸ்ரீநிதி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர்.

**ஆகஸ்ட் 24:** எஸ்.வி.ராஜதுரையின் *Periyar: Caste, Nation and Socialism* நூலின் அறிமுக விழா கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் அன்பகத்தில் நடைபெற்றது. ஏ.எஸ்.பன்னீர்செல்வன், டெல்லியைச் சேர்ந்த வித்யா பூஷன் ராவத், முனைவர் கார்த்திக் ராம் மனோகர், ஆந்திர திராவிடப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் கே.எஸ்.சலம் ஆகியோர் விரிவாக உரை நிகழ்த்தினர்.

**ஆகஸ்ட் 23– 25:** சேலம் மாவட்ட இளைஞர் அணி சார்பில் ‘மனிதம் நமது அடையாளம்! ஜாதி நமக்கு அவமானம்! மடியட்டும் ஆணவப் படுகொலைகள்!’ என்ற தலைப்பில் 3 நாட்கள் தொடர் பிரச்சாரம் நடைபெற்றது.

**ஆகஸ்ட் 27:** திருப்பூர் மாஸ்கோ நகரில் இந்து முன்னணி சார்பில் அனுமதியின்றி வைக்கப்பட்ட விநாயகர் சிலை கழகத் தோழர்கள் முயற்சியால் அகற்றப்பட்டது.

**செப்டம்பர் 01– 10:** சென்னை மாவட்ட இளைஞர் அணி சார்பில் ‘மனிதம் நமது அடையாளம்! ஜாதி நமக்கு அவமானம்! மடியட்டும் ஆணவப் படுகொலைகள்!’ என்ற தலைப்பில் 10 நாட்கள் தொடர் பிரச்சாரம் நடைபெற்றது. கலை நிகழ்ச்சி, நையாண்டி நிகழ்ச்சி, 20க்கும் மேற்பட்ட பேச்சாளர்களின் உரை வீச்சு என பெரிதும் கவனம் ஈர்த்தது இப்பரப்புரை.

**செப்டம்பர் 2– 3:** ‘மனிதம் நமது அடையாளம்! ஜாதி நமக்கு அவமானம்!’ என்ற தலைப்பில் மயிலாடுதுறையில் 2 நாட்கள் தொடர் பிரச்சாரம் நடைபெற்றது.

**செப்டம்பர் 07:** ஈரோட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் தலைமைக்குழு கூடியது. செப்டம்பர் 17 முதல் டிசம்பர் 24 வரை தமிழ்நாடெங்கும் ஜாதி எதிர்ப்பு பரப்புரையை தீவிரமாக மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டது.

**செப்டம்பர் 07:** ஈரோடு மல்லிகை அரங்கில் சீர் வாசகர் விருது விழா நடைபெற்றது. குடிஅரசு தொகுப்புப் பணிக்காக கழகத் தலைவருக்கு சீர் விருதுடன், ரூ.1 லட்சம் வழங்கப்பட்டது. கழகத் தலைவர் குறித்து மிகச்சிறப்பாக உருவாக்கப்பட்டிருந்த ஆவணப்படம் திரையிடப்பட்டு, கழகத் தோழர்களை உணர்ச்சிப்பெருக்கில் ஆழ்த்தியது.

சேலம் மாவட்டம் ஓமலூரில் ராஜஸ்தானி உணவகம் ஒன்று தமிழில் பெயர்ப்பலகை வைக்காததைக் கண்டித்து கழகத் தோழர்கள் இருமுறை மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில், தமிழ்நாடு அரசின் ஆணையை நாங்களே நிறைவேற்ற நேரிடும் என எச்சரித்ததை அடுத்து, பெயர்ப்பலகையில் தமிழ்ப்பெயரும் சேர்க்கப்பட்டது.

**செப்டம்பர் 14:** ஈரோடு மாவட்டம் சென்னிமலை சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. சத்யா, மைனர், இந்திரகுமார் தேரடி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

**செப்டம்பர் 17:** பெரியார் பிறந்தநாளையொட்டி ராயப்பேட்டையில் ‘மனிதம் நமது அடையாளம்; ஜாதி நமக்கு அவமானம்’ என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. நடிகர் சத்யராஜ், வழக்குரைஞர் ப.பா. மோகன், பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் உரையாற்றினர். 20-க்கும் மேற்பட்ட ஜாதி மறுப்பு இணையர்களுக்கு நடிகர் சத்யராஜ் நினைவுப்பரிசு வழங்கினார்.

**செப்டம்பர் 19:** காசா மீதான போரை நிறுத்தக்கோரி இஸ்ரேலை கண்டித்து பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் சென்னை புதுப்பேட்டையில் பேரணி, ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் கழகத்தோழர்கள் பங்கேற்றனர்.

**செப்டம்பர் 23:** தூத்துக்குடி வடக்கு சோட்டையன் தோப்பு பகுதியில் பெரியாரின் 147-வது பிறந்தநாளையொட்டி, ‘மனிதம் நமது அடையாளம்! ஜாதி நமக்கு அவமானம்!’ என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் நிறைவுரையாற்றினார்.

**செப்டம்பர் 28:** கோவை ஆர்.எஸ்.புரத்தில் புதிய இளைஞர்களுக்கான பயிலரங்கம் நடைபெற்றது. பால். பிரபாகரன், ஆசிரியர் சிவகாமி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் வகுப்புகள் எடுத்தனர். சிற்பி ராசனின் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி நடைபெற்றது.

* ‘மனிதம் நமது அடையாளம்! ஜாதி நமக்கு அவமானம்!’ என்ற தலைப்பில் குமாரபாளையத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கேப்டன் அண்ணாதுரை, கோபி வேலுச்சாமி ஆகியோர் உரையாற்றினர். சிற்பி ராஜனின் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடைபெற்றது.

**அக்டோபர் 04:** திருச்சியில் பெரியார் என்னும் பெருநெருப்பு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்திரகுமார் தேரடி, மைனர், ராஜீவ் காந்தி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர்.

**அக்டோபர் 05:** ‘மனிதம் நமது அடையாளம்! ஜாதி நமக்கு அவமானம்!’ என்ற தலைப்பில் திருப்பூரில் ஒரே நாளில் 11 கூட்டங்கள் நடைபெற்றன.

**அக்டோபர் 10:** ஆனைமுத்து நூற்றாண்டு விழா மலர் வெளியீட்டு நிகழ்ச்சி அடையாறு முத்தமிழ்ப் பேரவையில் வாலாசா வல்லவன் தலைமையில் மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி சார்பில் நடைபெற்றது. உதயநிதி ஸ்டாலின் மலர் வெளியிட்டார். ஆ.ராசா, விடுதலை இராசேந்திரன், கு.ராமகிருஷ்ணன், செந்தலை கவுதமன், சுப.வீ ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

**அக்டோபர் 11:** ஈரோடு மாவட்டம் சிவகிரியில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஈரோடு வீரமணி, மைனர், இந்திரகுமார் தேரடி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர்.

**அக்டோபர் 15, 16:** திருவண்ணாமலையில் ‘மனிதம் நமது அடையாளம்! ஜாதி நமக்கு அவமானம்!’ என்ற தலைப்பில் 8 இடங்களில் பரப்புரைக் கூட்டங்கள் நடைபெற்றன.

**நவம்பர் 08:** திமுகவின் பவள விழாவை அக்கட்சியின் இளைஞர் அணி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அறிவுத்திருவிழாவாகக் கொண்டாடியது. அதன் ஒரு அங்கமாக நடைபெற்ற முற்போக்கு புத்தகக் காட்சியில் கழகத்தின் நிமிர்வோம் பதிப்பகம் பங்குபெற்றது. 9 நாட்கள் நடைபெற்ற இப்புத்தகக் காட்சியில் ரூ.82,000-க்கு கழக நூல்கள் விற்பனையாகின.

**நவம்பர் 09:** அறிவுத்திருவிழாவின் அங்கமாக நடைபெற்ற “இருவண்ணக் கொடி வயது 75” இருநாள் கருத்தரங்கின் இறுதி அமர்வில், ‘கருஞ்சட்டைக் கழகமும் கருப்பு சிவப்புக் கழகமும்’ என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார்.

* ஈரோடு வடக்கு மாவட்டக் கழகம் சார்பில் பவானியில் “மனிதம் நமது அடையாளம் ஜாதி நமக்கு அவமானம்” பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. நாத்திக சோதி, கோபி வேலுச்சாமி, நாமக்கல் சாமிநாதன், இராம.இளங்கோவன் உள்ளிட்டோர் உரையாற்றினர். சூலூரில் ‘மனிதம் நமது அடையாளம்; ஜாதி நமக்கு அவமானம்’ பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. திருப்பூர் துரைசாமி, பரிமளராசன், நிர்மல், வெங்கட், திருப்பூர் முத்து ஆகியோர் உரையாற்றினர்.

**நவம்பர் 14:** ஆஸ்திரேலியா தமிழ் கலை மற்றும் கலாச்சார இயக்கம் சார்பில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் பேராசிரியர் சரசுவதி ஆகியோருக்கு அடிலெய்டில் பாராட்டு விழா நடைபெற்றது.

**நவம்பர் 26:** கோவை, திருப்பூர், மேட்டூர், சென்னை ஆகிய பகுதிகளில் சட்ட எரிப்பு நாள் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஜாதி ஒழிப்பு மாவீரர்களை நினைவுகூர்ந்து பலர் உரையாற்றினர்.

**நவம்பர் 27:** சேலம் கொளத்தூரில் தமிழீழப் போர்க்களத்தில் மடிந்த மாவீரர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ஈழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு சார்பாக நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாவீரர் நாள் உரை நிகழ்த்தினார்.

* ஆஸ்திரேலியாவின் அடிலெய்டில் தமிழ்தேசிய ஒருங்கிணைப்புக்குழு சார்பில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்ச்சியில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் கலந்துகொண்டு உரையாற்றினார்.

**நவம்பர் 29:** சேலத்தில் ‘, மனிதம் நமது அடையாளம்; ஜாதி நமக்கு அவமானம்’ பரப்புரைக் கூட்டம் ஒரே நாளில் 4 இடங்களில் நடைபெற்றது.

**டிசம்பர் 07:** கோவையில் நடந்த ஜாதி ஒழிப்புப் போராட்டத்தின் நோக்கத்தை விளக்கி ஈரோடு வடக்கு மாவட்டம் சித்தாரில் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. நாத்திக சோதி, கோபி வேலுச்சாமி, இராம.இளங்கோவன் உரையாற்றினர்.

* திருப்பரங்குன்றத்தில் மதக்கலவரத்தைத் தூண்டும் வகையில் தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனைக் கண்டித்து கோபியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**டிசம்பர் 08:** கோவையில் நடந்த ஜாதி ஒழிப்புப் போராட்டத்தின் நோக்கத்தை விளக்கி மயிலாப்பூர் பல்லக்கு மாநகரில் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. உமாபதி, தேன்மொழி, மைனர், புதுவை தீனா, விசிக சாரநாத் ஆகியோர் உரையாற்றினர்.திருப்பரங்குன்றத்தில் மதக்கலவரத்தைத் தூண்டும் வகையில் தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனைக் கண்டித்து சென்னை எழும்பூரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**டிசம்பர் 09:** திருப்பரங்குன்றத்தில் மதக்கலவரத்தை தூண்டும் வகையில் தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனைக் கண்டித்து திருப்பூரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**டிசம்பர் 10:** கோவையில் நடந்த ஜாதி ஒழிப்புப் போராட்டத்தின் நோக்கத்தை விளக்கி மயிலாப்பூரில் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. அன்பு தனசேகர், வழக்குரைஞர் திருமூர்த்தி, உமாபதி, ரவுத்திரா ஆகியோர் உரையாற்றினர்.

**டிசம்பர் 11:** மதக்கலவரத்தைத் தூண்டும் வகையில் தீர்ப்பளித்த ஜி.ஆர்.சுவாமிநாதன் பதவியை ராஜினாமா செய்ய வலியுறுத்தி பொள்ளாச்சியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திருப்பரங்குன்றத்தில் மதக்கலவரத்தைத் தூண்டும் வகையில் தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனைக் கண்டித்து மேட்டூரில் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மைனர், கரிகாலன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர்.

**டிசம்பர் 13:** கோவையில் நடந்த ஜாதி ஒழிப்புப் போராட்டத்தின் நோக்கத்தை விளக்கி அன்னூர், காரமடை, மேட்டுப்பாளையம், கணேசபுரம் ஆகிய 4 இடங்களில் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. 20-க்கும் மேற்பட்டோர் உரையாற்றினர்.

**டிசம்பர் 14:** ஈரோடு வடக்கு மாவட்டக் கழகத்தின் வாராந்திர தெருமுனைக் கூட்டம் அம்மாபேட்டை பகுதியில் நடைபெற்றது. பெரியார், அம்பேத்கர் மற்றும் கழக களப்பணிகள் குறித்த காணொளிகள் திரையிடப்பட்டன. தாரமங்கலத்தில் சேலம் மாவட்ட இளைஞர் அணி சார்பில் ‘மனிதம் நமது அடையாளம் ஜாதி நமக்கு அவமானம் ’ பொதுக்கூட்டம் நடைபெற்றது. பெருந்திரள் மக்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

**டிசம்பர் 15:** கோவையில் நடந்த ஜாதி ஒழிப்புப் போராட்டத்தின் நோக்கத்தை விளக்கி, ‘மனிதம் நமது அடையாளம்; ஜாதி நமக்கு அவமானம்’ என்ற தலைப்பில் வடசென்னையில் முழு நாள் பரப்புரை நடைபெற்றது.

**டிசம்பர் 21:** கோவையில் நடந்த ஜாதி ஒழிப்புப் போராட்டத்தின் நோக்கத்தை விளக்கி, ‘மனிதம் நமது அடையாளம்; ஜாதி நமக்கு அவமானம்’ என்ற தலைப்பில் ஈரோடு வடக்கு மாவட்டம் குருவரெட்டியூரில் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. டிசம்பர் 24-இல் பொள்ளாச்சி வேட்டைக்காரன்புதூரில் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது.

**டிசம்பர் 24:** ராயப்பேட்டையில் களப்பணியில் உயிர்நீத்த கண்ணன் - குமாரின் 20-ஆம் ஆண்டு நினைவுநாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தபசி குமரன், அன்பு தனசேகர், விசிக ரூதர் கார்த்திக், அறிவுமதி ஆகியோர் உரையாற்றினர். ஈரோடு தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் பெரியாரின் நினைவுநாளில் இரத்தினசாமி, சண்முகப்பிரியன், செல்வராசு உள்ளிட்ட 13 தோழர்கள் உடல்தானம் பதிவு செய்தனர். கோவை ஜாதி ஒழிப்புப் போராட்டத்தின் நோக்கத்தை விளக்கி, ‘மனிதம் நமது அடையாளம்; ஜாதி நமக்கு அவமானம்’ என்ற தலைப்பில் மடத்துக்குளத்தில் 3 இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

**டிசம்பர் 26:** ஏற்காடு மலைப்பாதை கொண்டை ஊசி வளைவில் பெரியார் பெரியாரை நாம் தமிழர் கட்சி மறைத்ததை கண்டித்து, மீண்டும் பெரியார் பெயரை கழகத் தோழர்கள் எழுதி பதிலடி கொடுத்தனர்.

**டிசம்பர் 29:** கோவையில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மாபெரும் ஜாதி ஒழிப்புப் போராட்டம் நடைபெற்றது. ஜாதிய தீண்டாமைக்கு எதிராக தமிழ்நாடு அரசு உறுதியான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

## பெரியார் முழக்கத்திற்கு வளர்ச்சி நிதி!

- கழகத் தோழர் இரண்யா ரூ.2000 பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக முழக்க வங்கி கணக்குக்கு அனுப்பியுள்ளார்.

- கழகத் தோழர்கள் ரம்யா - பிரகாசு இணையரின் மகள் சிறகியின் முதலாவது பிறந்தநாள் விழா கழகத் தலைமை அலுவலகத்தில் 02.01.2026 அன்று நடைபெற்றது. அந்நிகழ்ச்சியின்போது, புரட்சிப் பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதியாக ரூ.3,000-அய், சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதியிடம் வழங்கினர்.

- தோழர் இரத்தினசாமி (அமைப்புச் செயலாளர்) அவர்கள் ஈரோடு தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் 100 முழக்கத்துக்கான சந்தா தொகையை ரூ.30,00 வங்கிக் கணக்குக்கு அனுப்பியுள்ளார்.

- கழகத் தோழர் கனி-இலக்கியா இணையர்கள் 50 பெரியார் முழக்கம் சந்தா மற்றும் தொகை ரூ.15000அய் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களிடம் ஒப்படைத்தார்.

**நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் (– ஆசிரியர்).**

# பெரியார் ஒருவர்தான் பெரியார்!

சனவரி 3-ஆம் தேதி மயிலாடுதுறையில் நாம் தமிழர் கட்சியின் சார்பாக பெரியாரைப் போற்றுவோம் என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் பேசிய சீமான் பெரியாரைத் தரக்குறைவாக விமர்சித்தும், தமிழ்நாட்டுக்குப் புதிதாக பல பெரியார்களை அறிமுகம் செய்தும் வைத்திருக்கிறார். ஜாதி ஒழிப்புக்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த பெரியாரை 'பெரியார்' என ஏற்க முடியாது எனக்கூறும் இவர், புதிதாக பட்டியலிட்டிருக்கும் பலர் எத்தனை முரண்பாடுகளாக இருக்கின்றனர் என்பதை தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

> *"ஜாதிய பாகுபாடுகளை எதிர்த்ததால், கொலை செய்யப்பட்ட இம்மானுவல் சேகரனாரும் பெரியார்! அவர் கொலைக்கு காரணமான பசும்பொன்னும் பெரியார்!*
>
> *"தமிழ்நாடு" என்று பெயர் வைக்கச் சொல்லி 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து செத்தே போன சங்கரலிங்கனாரும் பெரியார்! பெயர் வைக்க மறுத்த காமராஜரும் பெரியார்!!*
>
> *தமிழ்தான் வழிபாட்டு மொழி என்ற பெருஞ்சித்திரனாரும் பெரியார்!*
>
> *சமஸ்கிருத மந்திரங்கள் தேவை என்ற மபொசியும் பெரியார்!!*
>
> *இது ஆரிய நாடு என்ற பாரதியாரும் பெரியார்!*
>
> *ஆரியக் கவிபாடி உடைத்த திராவிடப் பாவேந்தர் பாரதிதாசனும் பெரியார்!!*
>
> *"நாடகக் காதல்" ராமதாசும் பெரியார்!*
>
> *"ஆணவக்கொலை எதிர்ப்பு" திருமாவளவனாரும் பெரியார்!!*
>
> *மொழிப்போர் ஈகியரும் பெரியார்!*
>
> *போலீஸ் மந்திரி கக்கனாரும் பெரியார்!!*
>
> *"இந்துவாகச் சாக மாட்டேன்" னு சொன்ன அம்பேத்கரும் பெரியார்!*
>
> *அம்பேத்கர் கருத்தை எதிர்த்த எம்.சி. ராஜாவும் பெரியார்!!*
>
> *முதலாளித்துவத்தை எதிர்த்து போரிட்ட தமிழரசனும் பெரியார்!*
>
> *முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ ஆட்சி நடத்திய சேரசோழபாண்டியரும் பெரியார்!!*
>
> *பிரபாகரனை தூக்கிலிடச் சொல்லி, சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றிய மாமனார் காளிமுத்துவும் பெரியார் தானாம்!!!"*

என முரண்பாடுகளின் முழு உருவமாக சீமான் இருப்பதை சுட்டிக்காட்டி அவர் பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில் சீமானுக்கு பதிலடி தரும் வகையில், அதே மயிலாடுதுறையில் மறுநாளே 'பெரியார் ஒருவர்தான் பெரியார்' என்ற தலைப்பில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுக்கூட்டம் நடத்தியுள்ளது. அந்த பொதுக்கூட்டத்தில் பேசிய கருத்தாளர்கள் பலரும் சீமானின் பிதற்றல் கருத்துக்களை எதிர்த்தும், நாக்பூர் ஏஜெண்டாக - முழு சங்கியாக மாறியிருப்பதை அம்பலப்படுத்தியும் ஆணித்தரமான கருத்துக்களை முன்வைத்தனர். அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கருத்துக்களை இங்கே தருகிறோம்.

**சுபவீ:** 1885-இல் திராவிட பாண்டியன் என்று ஒரு இதழ் இந்த மண்ணிலே வந்தது. ஜான் ரத்தினம் என்பவர் தொடங்கினார். அதில் ஆசிரியராக இருந்தவர் அயோத்திதாச பண்டிதர். 1892-இல் திராவிடத்தை பெயராக வைத்து தன் அமைப்பை தொடங்கியவர் அயோத்திதாச பண்டிதர்.



1894-இல் திராவிடம் என்கிற சொல்லை வைத்து ஒரு கட்சியை தொடங்கியவர் நம்முடைய தாத்தா ரெட்டைமலை சீனிவாசன். திராவிட இயக்கத்தினரை சொல்வதைப் போல அயோத்திதாசரையும் இரட்டைமலையாரையும் திராவிட பன்றிகள் என்று சொல்லுவதற்கு தைரியம் உள்ளதா? இல்லை என்பதை உரத்துச் சொல்லுங்கள். இனி எந்த ஊரில் நீங்கள் பெரியாரை பற்றி இழிவு செய்து பேசினாலும் அதே ஊரில் அதே இடத்தில் அடுத்த நாள் இப்படி ஒரு பெரும் கூட்டத்தை நாங்கள் நடத்தியே தீருவோம். திராவிட மாணவர் பேரவை நடத்துகிற முதல் பொதுக்கூட்டம் இது. உங்களுக்காவது தேர்தலில் நின்று டெபாசிட் வாங்க வேண்டும் என்கிற கவலை இருக்கிறது.

எங்களுக்கு எந்த வேலையும் இல்லை திராவிட இயக்கத்தை பரப்புவதுதான் சாகிற வரைக்கும் எங்களின் வேலை. அடுத்து நான் அதிபராகிவிட்டால் அதிபராகிவிட்டால் என்று அலைந்து கொண்டிருக்கிறீர்களே, முதலமைச்சர் பதவி தேடி வந்தபோது வேண்டாம் என்று சொன்னவரடா எங்கள் கிழவன். சுயமரியாதை இயக்கத்தைப் போல ஒரு இயக்கத்தையும், இந்த நாட்டுக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட பெரியாரை போல ஒரு தலைவரையும் நான் பார்த்ததில்லை என்று வஉசி எழுதியுள்ளார்.

**கரு.பழனியப்பன்:** தன் வீட்டு கார் ஓட்டுநரை மட்டும்தான் இன்னும் சீமான் பெரியார் என்று கூறவில்லை. ராமதாஸ் வரை வந்துவிட்டார். அய்யய்யோ ராமதாஸை கூறிவிட்டோமே என பதற்றத்தில் விசிக தலைவர் திருமாவளவனையும் பட்டியலில் சேர்த்துக்கொண்டார். சீமான் யாரையெல்லாம் பெரியார் என்று சொன்னாரோ அவர்களெல்லாம் பெரியார் என்று கூறியதே பெரியாரைத்தான். சீமான் பெரியார் என்று சொல்கிற பழனி பாபா என்ன சொன்னார்? பெரியாரை திட்டுபவனை நம்பாதே என்று சொன்னார். பெண்களுக்கு சொத்தில் பங்கு தர வேண்டுமென்று சொன்னவர் பெரியார்; சட்டம் போட்டவர் கலைஞர்.



பெரியார் சொல்லி கலைஞர் செய்தது இது, எனவே என் மனைவிக்கு சொத்து வேண்டாம் என்று அவருடைய அப்பாவிடம் சீமான் சொல்வாரா? பெரியார் தன் சொத்துக்களை அவரே வைத்துக்கொண்டார் என சொல்லும் சீமான் தன் சொத்துக்களைக் கொடுப்பாரா? பார்ப்பான் என்றால் எல்லோரையும் சமமாகப் பார்ப்பான் என்று புதுவிளக்கம் வேறு கொடுத்திருக்கிறார். 'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்ற யவை' என்ற குரலில் மாடல்ல என்றால் செல்வத்தை குறிப்பது. ஆனால் அதை மாட்டை குறிக்கிறது என வாய்க்கு வந்ததை உளறிக்கொட்டுகிறார்.

1920 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் ஒரு வயதுக்கு உட்பட்ட பெண் குழந்தை விதவைகள் இருந்தனர். திருமணமாகி கணவன் இறந்து போன பெண் பிள்ளைகள் 1920-இல் ஒரு வயசுக்கு கீழே இருந்தவர்கள் 497 பேர். ஒரு வயதில் இருந்து ரெண்டு வயதுக்குள் இருந்தவர்கள் 494 பேர். 3 வயதுக்குள் இருந்த விதவைகள் 1,237 பேர். 3முதல் 4 வயதுக்குட்பட்ட விதவைகள் 6,867. 4 முதல் 5 வயதுக்குட்பட்ட விதவைகள் 18,000 பேர். 10-இல் இருந்து 15 வயதுக்கு உட்பட்டவர்கள் ஒன்னேகால் கோடி பேர். சீமான் சொல்வது போல இதெல்லாம் வாட்ஸ் ஆப் உருட்டு அல்ல. அரசின் தரவுகள். இந்த விதவைப் பெண்களை மொட்டை அடித்து மூலையில் உட்கார வைத்துவிடுவார்கள். பெரியாரின் தங்கை மகளும் இப்படி 10 வயதில் விதவையானார். அந்த பெண் குழந்தை பின்னாளில் பருவமடைந்த பின்னர் மறுமணம் செய்துவைக்கிறார் பெரியார். விதவை மறுமணம் அங்கு ஆரம்பித்தது. இந்தத் தேர்தலில் சீமான் தான் தமிழ்நாட்டுக்கு பொழுதுபோக்கு, அவர் செயல்பாடுகள் அப்படித்தான் இருக்கிறது.

**பேரா.செயராமன்:** பெரியார் முதலமைச்சராக இருந்ததில்லை, பிரதமராக இருந்ததில்லை, எந்த அமைச்சராகவும் இருந்ததில்லை. 1940-லும் 42-லும் முதல்வராக இருக்க அழைப்பு ஆளுநரிடமிருந்து வந்தும் அதை நிராகரித்தவர். ஆனால், கடந்த ஒரு நூற்றாண்டாக பெரியார் தான் இந்த நாட்டை ஆண்டிருக்கிறார். "ஆண்டவன் சொல்றான், அருணாசலம் செய்றான்"னு சொன்ன மாதிரி, பெரியார் சொன்னார் நீதிக்கட்சி செய்தது. பெரியார் சொன்னார் காமராசர் செய்தார். பெரியார் சொன்னார் அண்ணா செய்தார், கலைஞர் செய்தார். பெரியார் இல்லாவிட்டாலும் கூட வழிகாட்டு நெறிமுறைகளாக பெரியாரினுடைய தத்துவமும் சொற்களும்தான் இன்று வரை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த பெரியார் மீது அவதூறை வாரி இறைத்திருக்கிறார்கள். நாக்பூரில் இருக்கக்கூடிய RSS-ன் தலைவர் மோகன் பகவத்தின் கட்டளைப்படி, சென்னையில் ஆடிட்டர் குருமூர்த்தியால் அந்த உலைக்களத்தில் தயாரிக்கப்பட்ட "பிராமணக் கடப்பாரை" மயிலாடுதுறைக்கு வந்திருக்கிறது. "திராவிடக் கோட்டையை நான் இடிப்பேன், பிராமணக் கடப்பாரை வைத்து" என்று அவர் சொன்னார். பிராமணர்களின் கையில் இவர்தான் கடப்பாரை. உண்மையிலேயே ஒரு வலிமையான பார்ப்பன கடப்பாரை இங்கே இருந்தது. ராஜகோபாலாச்சாரியார் என்ற பெயரில். எவ்வளவோ முயன்ற அந்த கடப்பாரையை தனது இடது கையால் தூக்கி எறிந்தவர் பெரியார்.



பெரியார் என்ன செய்தார்? கலைஞர் கருணாநிதி சொன்னார், "ஐயா நீங்கள் போராட வேண்டாம், நான் அதற்கான சட்டம் போடுறேன்" என்று சொல்லி, 'அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்' என்று சட்டம் இயற்றினார். 2021-இல் கலைஞர் கருணாநிதியினுடைய மகன், இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் என்ன செய்தார் என்றால் மூன்று பெண் துணை அர்ச்சகர்களை நியமனம் பண்ணார். அந்தப் பொண்ணுங்க பேரு ரஞ்சிதா, ரம்யா, கிருஷ்ணவேணி. ரஞ்சிதா தலித், ரம்யா எம்.பி.சி., கிருஷ்ணவேணி வள்ளுவர் சமூகத்தைச் சேர்ந்தவர். பெரியார் சிரிக்கிறார்... பதறுறான் பதறுறான்... திராவிட இயக்கம் 1000, 2000 ஆண்டு மேலாதிக்கத்தைத் தகர்த்தது. திராவிடத்தைத் தகர்க்காமல் விடமாட்டோம் என்று வருகிறான் கடப்பாரை எடுத்துக்கொண்டு. இந்த கடப்பாரைகள் எல்லாம் அடித்து நொறுக்கப்படும். பெரியார் சாகாதவர், நிரந்தரமானவர், என்றென்றும் அரணாக நின்று காக்கக்கூடியவர்.

**சிற்பி செல்வராசன்:** பெரியார்கள் எல்லாம் ஏற்றுக்கொண்ட பெரியார் எங்கள் பெரியார் என்பதுதான் இங்கே வரலாறு. பெரியார் செத்துப்போய் 52 ஆண்டுகள் ஆகியும் எதிரிகளால் தாங்க முடியவில்லை என்று சொன்னால் அவர்தான் பெரியார். நான் இந்த நேரத்தில் எச்சரிக்கையாக சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நண்பர்களே ஒவ்வொருவரையும் சுட்டிக்காட்டி பேசினார். அதில் இருவரை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தேவநேய பாவாணர் ஐயா பாவாணர் தமிழ்ச் சமுதாயத்திற்காக பாடுபட்டவர், மிகப்பெரிய புலவர் என்று சொன்னார் சீமான். நாங்களும் மறுக்க விரும்பவில்லை. அந்த தேவநேய பாவாணருக்கு திராவிட மொழிநூல் ஞாயிறு என்கிற பட்டத்தை வழங்கிய மாமனிதர் பெரியார். அவர் வேலை இல்லாமல் காட்பாடியில் சிரமப்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில் உதவிகள் செய்து காப்பாற்றியவர் பெரியார். எங்களுக்கு தமிழ் உணர்ச்சியை கொடுத்தவர் பாவேந்தர் என்று சொல்கிறார்.



**தோழர் ரேவதி:** 1939-இல் பேரறிஞர் அண்ணா அவர்கள் பெரியாரை பற்றி ஒரு வரியை சொல்லியிருப்பார். அதைச் சொல்லி சீமான் அவர்களையும் சீமானின் தம்பிகளையும் நாங்கள் எச்சரித்துக் கொள்கிறோம்.'பிரிட்டிஷ் சிங்கத்தின் பிடரியை பிடித்து ஆட்ட நினைப்பவர்கள் இன்றைக்கு ஈவேராவின் தலைமுடியை பிடித்து ஆட்ட நினைக்கிறார்கள் அவர்களுக்கு ஒன்று தெரியுமா? ஈவெராவின் அந்த தாடியை பிடித்து ஆட்ட நினைக்கிறார்கள். அந்த தாடியில் ஒட்டுமொத்த தமிழ்நாடே இருக்கிறது என்பது அவர்களுக்கு தெரியுமா?

இன்றைக்கு அவர்கள் ஒரு மயிரை அசைக்க நினைத்தாலே ஒட்டுமொத்த தமிழ்நாடும் பொங்கிவிடும்' என்று சொன்னார் அண்ணா. அதை நாங்கள் இன்றைக்கு சொல்லி உங்களை எச்சரித்துக் கொள்கிறோம். ஏனென்றால் தமிழ்நாடுதான் பெரியார். பெரியார்தான் தமிழ்நாடு என்பதை இந்த முட்டாள் சீமானுக்கு யாராவது சொல்லிப்புரிய வைக்க வேண்டும். உங்களுக்கு பெரியார் என்ற சொல்லும், திராவிடம் என்ற சொல்லும் கசக்கும் என்று சொன்னால் நாங்கள் திரும்பத் திரும்ப சொல்லுவோம். பெரியார் ஒருவர்தான் பெரியார்.



Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# பெரியார் நினைவுநாளில் கழகம் மரியாதை!

**கோவை:** பெரியார் நினைவு நாளையொட்டி டிச.24 அன்று காந்திபுரம் பெரியார் சிலை முன்பு காலை 9.30மணிக்கு கோவை மாநகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் புகழ்வணக்கம் செலுத்தப்பட்டது.



**ஏற்காடு:** டிசம்பர்-24 அன்று கழகப் பொறுப்பாளர் ஏற்காடு பெருமாள் தலைமையில் தந்தை பெரியாருக்கு புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது.



**சேலம் கிழக்கு:** 24.12.2025 காலை 10.00 மணியளவில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள தந்தை பெரியார் உருவச்சிலைக்கு சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் சக்திவேல் தலைமையில் மாலை அணிவித்து கொள்கை முழக்கம் எழுப்பி மரியாதை செலுத்தப்பட்டது.



டேவிட் (சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர்), முத்துமாணிக்கம் (கிழக்கு மாவட்ட அமைப்பாளர்), ஆனந்தி (சேலம் மாநகரச் செயலாளர்), ரமேஷ்(இளம்பிள்ளை நகரத் தலைவர்), மோகன்ராஜ் (இளம்பிள்ளை நகரச் செயலாளர்), தேவராஜ் (சேலம் மாநகர அமைப்பாளர்), வெற்றிமுருகன்(மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்), பிரபு(சேலம் மாநகர பொருளாளர்) மற்றும் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர்கள், தோழர்கள் கலந்து கொண்டனர்.

**சேலம் மேற்கு:** 24.12.2025 கோனூர் சமத்துவபுரம் பகுதியில் உள்ள தந்தை பெரியார் உருவச்சிலைக்கு காலை 10.00 மணியளவில், சுதா (சேலம் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்) தலைமையில் மாலை அணிவித்து கொள்கை முழக்கம் எழுப்பி, மரியாதை செலுத்தப்பட்டது. ஜாதி ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.



கோவிந்தராஜ் (சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர்), சக்திவேல் (தலைமைக் குழு உறுப்பினர்), அன்பு (மேற்கு மாவட்ட அமைப்பாளர்), மார்டின்(மேட்டூர் நகரத் தலைவர்), ராஜேந்திரன்(நங்கவள்ளி ஒன்றியச் செயலாளர்), விஜயகுமார்(கொளத்தூர் ஒன்றியச் செயலாளர்), கிருஷ்ணன் (மாவட்ட ஒருங்கிணைப்பாளர்), சந்திரசேகரன் (நங்கவள்ளி நகரச் செயலாளர், பன்னீர்செல்வம்(வனவாசி நகரச் பொருளாளர்), திவாகர்(மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்), பிரபாகரன்(மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர்), சிவசண்முகம்(மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்), உமாசங்கர்(வனவாசி நகரச் செயலாளர்) மற்றும் பொறுப்பாளர்கள், தோழர்கள் கலந்து கொண்டனர்.

**ஈரோடு:** வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் பெரியாரின் நினைவு நாளான டிசம்பர் 24 அன்று கோபியில் நிவாஸ் (மாவட்ட அமைப்பாளர்) தலைமையில் மணிமொழி, பெரியார் பிஞ்சு நிறைமதி ஆகியயோர் தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர்.



தோழர்கள் ஜெகநாதன்,அருளானந்தம், பழனிச்சாமி, ஈஸ்வரமூர்த்தி, ரகுநாதன், சுப்பிரமணியம், சூர்யபிரகாஷ், செல்வம், பெரியார் பிஞ்சுகள் அறிவுக்கனல், யாழ் திலீபன், வினோத் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திருச்சி:** திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள தந்தை பெரியாரின் உருவச் சிலைக்கு திருச்சி மாவட்டக் கழகத்தின் சார்பாக மீ.இ. ஆரோக்கியசாமி (மாவட்டத் தலைவர்), தலைமையில் புதியவன் (மாவட்ட அமைப்பாளர்) புகழ்வணக்கம் முழக்கத்தோடு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

**சென்னை:** சென்னை மாவட்டக் கழகம் சார்பில் பத்ரி நாராயணன் நினைவு பெரியார் படிப்பகத்திலும், சிம்சன் சாலையிலும், மயிலாப்பூர் வன்னியமதி ஆகிய இடங்களில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. தபசி குமரன் (தலைமை நிலையச் செயலாளர்), அன்பு தனசேகர் (தலைமைக் குழு உறுப்பினர்), மாவட்டத் தலைவர்கள் வேழவேந்தன்,சேத்துப்பட்டு இராசேந்திரன், இரா உமாபதி(மாவட்டச் செயலாளர்), இராவணன்(மாவட்ட துணைச் செயலாளர்), ம.கி எட்வின் பிரபாகரன்(மாவட்ட அமைப்பாளர்), ப.அருண் (இளைஞர் அணி அமைப்பாளர்), இளவரசன் (தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர்), பேரன்பு (மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர்), சு.கோபிநாத் (திருவல்லிக்கேணி பகுதித் தலைவர்), த.நா சூர்யா (அமைப்பாளர்) மற்றும் கழகத் தோழர்கள் 50-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



## குடிமங்கலத்தில் பெரியார் நினைவுநாளில் ஜாதி எதிர்ப்பு பரப்புரை

குடிமங்கலம் ஒன்றிய பகுதிகளில் தந்தை பெரியாரின் நினைவு நாளான டிசம்பர் 24 அன்று "மனிதம் நமது அடையாளம் ; ஜாதி என்பதுஅவமானம்" எனும் தலைப்பில் மடத்துக்குளம் ஒன்றிய மாவட்டக் கழகத்தின் சார்பில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன.



கணக்கன் (மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர்) தலைமை தாங்கினார். சிவானந்தம் (மடத்துக்குளம் ஒன்றியச் செயலாளர்), கடத்தூர் அய்யப்பன் (மடத்துக்குளம் ஒன்றிய அமைப்பாளர்) ஆகியோர் முன்னிலை வகித்தனர். காலை 11:00 மணிக்கு குடிமங்கலம் நான்கு சாலை சந்திப்பு, மதியம் 12.00 மணி அளவில் கொங்கல் நகரம் பேருந்து நிறுத்தம் அருகில், மாலை 03.00 மணியளவில் பெதப்பம் பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் என் மூன்று இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன. துரைசாமி (கழகப் பொருளாளர்), பரிமள ராசன் (சமூக வலைதள பொறுப்பாளர்), முகில் ராசு (திருப்பூர் மாவட்டத் தலைவர்), முத்து (திருப்பூர் மாநகர அமைப்பாளர்), தமிழ் அமுதன் ( மார்க்சிய சிந்தனையாளர்), வழக்கறிஞர்.பெரியார்தாசன் (ஆதித்தமிழர் பேரவை), ஈழவேந்தன் (ஆ.த.பே.மாநில அமைப்புச் செயலாளர்), கௌசல்யா காந்தி (மாவட்டச் செயலாளர் தாராபுரம் தி.வி.க) செல்வராஜ் (பெரியாரிய உணர்வாளர்) தாராபுரம் ராஜாமணி ஆகியோர் உரையாற்றினார்கள்.

தி.மு.க. பொறுப்பாளர் தோழர் கோபால கிருஷ்ணன் ரூ.1000 நன்கொடை வழங்கினார். தோழர் சுரேஷ் அனைவருக்கும் தேநீர் வழங்கினார். பொதுமக்கள் 1750 ரூபாய் நன்கொடை அளித்தனர். தெருமுனைக் கூட்டங்களை மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர் கணக்கன் நெறியாள்கை செய்தார். அய்யப்பன் (திருப்பூர் வடக்கு ஒன்றிய அமைப்பாளர்), தமிழ்நாடு மாணவர் கழகத்தின் தோழர்கள் ஈழமாறன், யாழிசை, யாழினி ஆகியோர் பங்கேற்றனர்.

**மடத்துக்குளம்:** ஒன்றிய கழகத்தின் சார்பில் பெரியாரின் நினைவு நாளான டிசம்பர் 24 அன்று உடுமலை கோட்டமங்கலம் தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் உள்ள பெரியார் சிலைக்கு கழகப் பொருளாளர் தோழர் துரைசாமி தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டு புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது. சசிகலா(சிபிஎம்), செல்வராஜ் (இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம்), குப்புசாமி என்கிற அய்யனார், சுசீலா (மாதர் சங்க ஒன்றியச் செயலாளர்) முருகன் (சிபிஎம்) ஆகியோர் பங்கேற்றனர்.



**கொளத்தூர்:** தந்தை பெரியாரின் 52-வது நினைவு நாளையொட்டி, கொளத்தூர் சோதனை சாவடி அருகே, ஒன்றிய கழகத்தின் சார்பில் புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது.

## தோழர் லலிதா நினைவுநாளையொட்டி ஏழை - எளியோருக்கு உணவு!

சென்னை கழகத் தோழர் புருஷோத்தமன் இணையர் லலிதாவின் நினைவு நாளையொட்டி, டிச-4, 2025, அவருடைய நந்தனம் இல்லத்தில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. ஏழை எளிய மக்களுக்கு உணவு வழங்கப்பட்டது.



தபசி குமரன் (தலைமை நிலையச் செயலாளர்), கு. அன்பு தனசேகர் (தலைமைக்குழு உறுப்பினர்), இரா. உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்), மாவட்டத் தலைவர்கள் மா. வேழ வேந்தன், சேத்துப்பட்டு இராசேந்திரன், மாவட்ட அமைப்பாளர்கள் ம.கி. எட்வின் பிரபாகரன், ந. தட்சிணாமூர்த்தி, இராவணன் (மாவட்ட துணைச்செயலாளர் ), ப.அருண் ( மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்), மயிலாப்பூர் பகுதித் தோழர்கள் மனோகர், சிவா, சு. கோபிநாத் (திருவல்லிக்கேணி பகுதித் தலைவர்), சே. ராஜேஷ் (பகுதிச் செயலாளர்), த.நா. சூர்யா (பகுதி அமைப்பாளர்), தோழர்கள் சைதை சிவா, தினகரன், இரண்யா, குறளரசி உள்ளிட்ட பல தோழர்கள் பங்கேற்றனர். புருஷோத்தமனின் மகனும் திரைப்பட இயக்குநருமான அருண் பிரபு, பேத்தி அனுகீர்த்தி அனைவரையும் வரவேற்றனர்.

## குடியுரிமையை பறிக்கும் கூட்டுச்சதி எஸ்.அய்.ஆர்.!



விசிக சார்பில் அம்பேத்கர் நினைவு நாளை முன்னிட்டு எஸ்.அய்.ஆர் (S.I.R) குடியுரிமை பறிக்கும் கூட்டுச்சதி விளக்கத் தெருமுனைக் கூட்டம் டிச-7, 2025 அன்று மயிலாப்பூர் அம்பேத்கர் பாலம் அருகில் ரூதர்புரம்.அ சுரேசு ( 125 வட்டச் செயலாளர்) தலைமையில் நடைபெற்றது. இரா. உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்) எஸ்.அய்.ஆர் குறித்தும் சனாதன எதிர்ப்பு களத்தில் தமிழ்நாடு எப்படி பயணிக்கிறது என்பது பற்றியும் கருத்துரையாற்றினார். யூதர் சு.கார்த்திக் (மண்டலச் செயலாளர்), வழக்கறிஞர் பி.சாரநாத் (மாவட்டச் செயலாளர்) மற்றும் பல்வேறு விசிக நிர்வாகிகள் உரையாற்றினார்கள். கழகத் தோழர்கள் குமார், பிரசாந்த் (முழக்கம் செய்தியாளர்) மற்றும் அசோக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புரட்சிப் பெரியார் முழக்கம்

ஆண்டு சந்தா ரூ.300/- | ஐந்தாண்டு சந்தா ரூ.1500/-

தொடர்புக்கு: 15. தோழமை, வெங்கடேஸ்வரா நகர், பெருங்குடி, சென்னை 600096. | பேச: 63697 76351

முழக்கம் தொடர்பான சந்தேகங்களுக்கு மேற்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

மின்னஞ்சல்: newsdvk@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : January 09, 2026

Owned and published By : K. Rajendran, from 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041.
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New no.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor ; K. Rajendran